**செய்தி வெளியீடு எண்: 651** **நாள் :09.12.2015**

**<u>செய்தி வெளியீடு</u>**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க ஆவின் நிறுவனத்தின் மூலம் சென்னை,திருவள்ளூர்,காஞ்சிபுரம், கடலூர் மாவட்ட மக்களுக்கு 590 மெட்ரிக் டன் பால் பவுடர் இலவசமாக விநியோகிக்கப்பட்டுள்ளது.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சென்னை,திருவள்ளூர்,காஞ்சிபுரம் மற்றும் கடலூர் மாவட்ட மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் பொருட்டு இலவசமாக இதுவரை மொத்தம் 590 மெட்ரிக் டன் பால் பவுடர் விநியோகிக்கப்பட்டுள்ளது. இந்த பால் பவுடர் அரை கிலோ பைகளில் அடைக்கப்பட்டு பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

சென்னை மாநகராட்சியின் 15 மண்டலங்களில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண உதவி மையங்கள் மூலமாக இதுவரை 267 மெட்ரிக் டன் பால்பவுடர் மாநகர மக்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

அம்பத்தூர், மாதாவரம் மற்றும் சோழிங்கநல்லூரில் உள்ள ஆவின் பால் உற்பத்தி நிலையங்களில் முழு அளவில் பால் உற்பத்தி செய்யப்பட்டு சென்னை மாநகர் முழுவதும் பால் தட்டுப்பாடின்றி விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**